# 2014 ஆம் ஆண்டுக்கான

# பொதுத் திறைசேரியின்

# அரசிறைக் கொள்கைகள்

# திணைக்களத்தின்செயலாற்றுகை அறிக்கை

# உள்ளடக்கம்

**பக்கம்**


தொலைநோக்கும் பணித்திட்டக் கூற்றும் iii

பணிகள் iv

1. அரசிறைஅபிவிருத்திகள் - 2014 1

2. 2014 ஆம் ஆண்டின் செயலாற்றுகை 5

3. நிர்வாகமும் கணக்குகளும் 13

# தொலை நோக்கு

நிலைபேறான அரசிறைக் கொள்கையொன்று வகுத்தமைக்கப்படுவதை உறுதி செய்தல்

# பணிக்கூற்று

அரசின் அகல் விரிவான அபிவிருத்திச் செயற்பாட்டு வரையறையினுள் அரசிறைக் கொள்கையை வகுத்தமைத்தலும் அமுல்படுத்தலும்

# பணிகள்

- தனிப்பட்ட, அரசாங்க மற்றும் சர்வதேச பிரதிநிதிகளை ஒருங்கிணைத்து நடுத்தர கால வரவு செலவுத் திட்ட சட்டகத்தினுள் அரசிறைக் கொள்கையை வகுத்தமைத்தலும் அமுல்படுத்தலும்.

- வரிக்கொள்கை மற்றும் அதனோடு தொடர்பான பிற சட்ட ஏற்பாடுகளை தயாரித்தல். (சுங்கத்தீர்வை மற்றும் பிற விசேட பொருட்களுக்கான வரி நீங்கலாக)

- அரசாங்க வருமானம் மற்றும் பெறுகை உள்ளடங்கலாக அரசிறை எண்ணக்கருக்கள் மற்றும் அரசிறைச் செயற்பாடுகளினை முகாமை செய்தலும் விதப்புரை செய்தலும்.

- அனைத்து அறிக்கையிடல்களும் உள்ளடங்கியதாக அரசிறை முகாமைத்துவப் பொறுப்புச் சட்டத்தினை செயற்படுத்துதல்

## 1.அரசிறை அபிவிருத்திகள்– 2014

### 1.1 மேன்நோக்கு

நடுத்தர கால பேரண்ட பொருளாதார அரசிறை வேலைச்சட்டகத்திற்குள் 2014 வரவு செலவுத்திட்டமானது 2013 இல் காணப்பட்ட 5.9 சதவீத மொ.உ.உற்பத்தியினை வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையில் மேலும் 5.2 சதவீதமாக குறைக்குமென எதிர்பார்க்கப்பட்டதுடன், அதிகளவான வருமான சேகரிப்பு மற்றும் அரசாங்க செலவினத்தின் முறையான முகாமை என்பவற்றினால் அரசிறை முகாமைத்துவத்திற்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.
சாதாரண சந்தர்ப்பங்களில், அரசாங்கத்தின் வருமானம் 2013 இல் ரூபா 1,137 பில்லியனிலிருந்து 2014 இல் ரூபா 1,195 பில்லியனாக 5.1 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, அரசாங்கத்தின் செலவினம் 2013 இல் ரூபா 1,669 பில்லியனிலிருந்து 2014 இல் 1,796 பில்லியனாக 7.6 சதவீதத்தினால் அதிகரித்தது. இது 2014 இல் மொ.உ.உற்பத்தியில் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை 0.1 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது. அரசாங்கத்தின் மொத்த வருமானத்தை பொறுத்தவரையில், மொ.உ.உற்பத்தியில் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியில் சதவீதமொன்றாக இந்த வருமான வீழ்ச்சியானது முன்னைய வருடத்தில் குறைவடைந்து காணப்பட்ட 13.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014 இல் 12.2 சதவீதமாக மேலும் அரசாங்க வருமானம் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை,2013 இல் பதிவாக்கிய 11.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் வரி வருமானமானது 10.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த மெதுவான வளர்ச்சியானது நிறுவன வருமான வரிகள், வட்டி மீதான வரி,மற்றும் இறக்குமதி வரிகள் என்பவற்றிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக ஏற்பட்டதாகும். எவ்வாறாயினும், வரியில்லாத வருமானம் 2013 இல் பதிவாக்கியிருந்த 7.7 சதவீதத்திலிருந்து ரூபா 145 பில்லியனாக 10.1 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கானபிரதான காரணம், அரச உடமை வியாபார தொழில் முயற்சிகளிலிருந்து இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்கள் அதிகரிக்கப்பட்டமையாகும். உள்நாட்டுப் பொருளாதார செயற்பாடுகளில் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த வளர்ச்சி காணப்படாத போதிலும், தெரிவுசெய்யப்பட்ட துறையினருக்கு வரி விலக்களிப்புகளும் சலுகைகளும் வழங்கப்பட்டதுடன், அரசாங்க வருமான வீழ்ச்சிக்கு பங்களிப்புச் செய்த வரி ஏய்ப்பு, வரி நிருவாகத்தில் காணப்பட்ட பலவீனங்கள் மற்றும் வரி விகித திருத்தங்கள் என்பன காணப்பட்டன.

அரசாங்க செலவினத்தினை பொறுத்தவரையில், மீண்டெழும் செலவினம் 2013 இல் 13.9 சதவீதத்திலிருந்து 2014 இல் மொ.உ.உற்பத்தியில் 13.5 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இதற்குப் பிரதான காரணம் குறைந்த பணவீக்கச் சூழல் ஒன்றில் மத்திய வங்கியினால் பின்பற்றப்பட்ட தளர்ந்த நாணயக் கொள்கை காரணமாக குறைந்த வட்டி விகிதத்திலிருந்து நன்மையடையும் வகையில் முன்னைய வருடத்தில் காணப்பட்ட 5.1 சதவீதத்திலிருந்து 2014 இல் மொ.உ.உற்பத்தியில் 4.5 சதவீதமாக வட்டிக் கொடுப்பனவு குறைவடைந்தமையாகும். எவ்வாறாயினும், 2014 இல் அரச உத்தியோகத்தர்களது சம்பள அதிகரிப்பு காரணமாக சம்பளம் மற்றும் வேதனங்கள் மீதான செலவினத்திலும் அதிகரிப்பு ஏற்பட்டது. 2013 இல் 1,205 பில்லியன் ரூபாவிலிருந்து மீண்டெழும் செலவினமானது 2014 இல் பெயரளவில் 1,323 பில்லியன் ரூபாவிற்கு 9.8 சதவீதத்தினால் அதிகரித்தது. வருமான பற்றாக்குறை முன்னைய வருடத்தில் பதிவாகியிருந்த 0.8 சதவீதத்தினை விட மொ.உ.உற்பத்தியில் 1.2 சதவீதமாக அதிகரித்தது. எவ்வாறாயினும், மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன் பெறுகையானது சாதாரண நிலைமையின் போதுரூபா473 பில்லியனாக 1.9 சதவீதத்தினால் அதிகரித்தது. அரசாங்க முதலீடானது 2013 இல்

5.4 சதவீதத்திலிருந்து 2014 இல் மொ.உ.உற்பத்தியில் 4.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இதற்கு மேலதிகமாக, மொ.உ.உ விகிதமாக அரசாங்க முதலீடு 2013 இல் காணப்பட்ட 5.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014 இல் 5.0 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. அரசாங்க வருமானத்தில் தொடர்ந்து காணப்பட்ட குறைந்த செயலாற்றுகையின் விளைவினால் மூலதனச் செலவினத்தில் வீழ்ச்சியேற்படுவதற்கு காரணமாக அமைந்தது. பொதுவான வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையானது இலக்கிடப்பட்ட ரூபா 516 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014 இல் ரூபா 591 பில்லியனாக அதிகரித்தது.


**1.2 அரசாங்க வருமானம்**

மொத்த அரசாங்க வருமானம் 2013 இல் பதிவாகிய 13.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014 இல் 12.2 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இதற்கான பிரதான காரணம் வருமான வளர்ச்சியில் ஏற்பட்ட வீழ்ச்சியாகும். 2014 இல் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 1,195 பில்லியனாகும். இது 2013 இல் பதிவாகிய ரூபா 1,137 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 5.1 சதவீத அதிகரிப்பாகும். இதற்கு மேலதிகமாக வரி வருமானம் ரூபா 1,050 பில்லியனாக 4.4 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை,வரியல்லாத வருமானம் ரூபா 145 பில்லியனாக 10.1 சதவீதத்தினால் அதிகரித்தது. எவ்வாறாயினும், மொத்தவருமான சேகரிப்பு வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் 2014 இல் ஏறக்குறைய ரூபா 242 பில்லியன்குறைவடைவதாகக் காணப்பட்டது.

**வரி வருமானம்**

மொத்த வரி வருமானம் மொ.உ. உற்பத்தியில்சதவீதமொன்றாக 2013 இல் காணப்பட்ட 11.6 சதவீதத்துடன்
ஒப்பிடுகையில் 2014 இல் 10.7 சதவீதமாக காணப்பட்டதுடன்,தொடர்ந்து வீழ்ச்சியடைந்தது. மொத்த வருமானத்தில்வரி வருமானத்தின் பங்கு 2013 இல் காணப்பட்ட88.4 சதவீதத்திலிருந்து 2014 இல் 87.8 சதவீதமாகவீழ்ச்சியடைந்தது. நிறுவன வருமான வரி, வட்டி மீதானவரி, பொருளாதார சேவைக் கட்டணம், சிகரெட்டுகள் மீதானமதுவரி மற்றும் இறக்குமதித் தீர்வை என்பவற்றிலிருந்துசேகரிக்கப்பட்ட வருமானத்தின் வீழ்ச்சி இந்த குறைவானசெயலாற்றுகைக்கு காரணமாக அமைந்தன. எவ்வாறாயினும்,உழைக்கும் போது செலுத்தும் வரி, துறைமுகங்கள்மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு, தொலைத்தொடர்புகள் அறவீடு போன்ற வரிகள் 2014 இல் சிறந்தசெயலாற்றுகையினை காட்டின.

**வரைபு :1 >அரசாங்க வருமானம்**



## அட்டவணை 1: அரசாங்க வருமானத்தின் மாறல் பகுப்பாய்வு– 2014 (ரூபா. மில்)

| விடயம் | 2013 | 2014 மதிப்பீடு | 2014 | காரணம் |
|---|---|---|---|---|
| வருமான வரி | **205,666** | **264,400** | **198,115** | ஏற்றுமதி, தகவல் தொழில்நுட்பம், தொழில் வாய்மைச் சேவைகள் மற்றும் வங்கித் துறை போன்ற உயர் வருமானத்தினை ஈட்டும் துறைகளில் அதிகரித்த தொழில் வாய்ப்பு, அதிகரித்த கூலிகள் காரணமாக அதிகரித்த வரி வருமானங்களுடன் இணைந்த வகையில், கடந்த ஆண்டில் உ.செ.வ.வ மூலம் திரட்டப்பட்ட வருமானமும் அதிகரித்துள்ளது. திறைசேரி முறிகள், உண்டியல் விநியோகம் மற்றும் வட்டி வரி மீதான வீழ்ச்சி வருமான வரியில் எதிர்மறையான வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன. நிறுவன மற்றும் சிறிய , நடுத்தர தொழில் முயற்சி துறைகளின் அபிவிருத்தியினைக் குறியிலக்காகக் கொண்டு வழங்கப்பட்ட குறைக்கப்பட் வரி சதவீதங்கள், விலக்களிப்புக்கள் மற்றும் கழிப்பனவுகள் காரணமாக வரி வருமானத்திலும் எதிர்மறையான தாக்கம் காணப்பட்டது. |
| பெறுமதிசேர் வரி | **250,523** | **290,000** | **275,350** | தயாரிப்புத் துறை, நிதிச் சேவைகள், ஹோட்டல்கள், உணவங்கள், மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் போன்ற துறைகளின் சிறப்பான செயலாற்றுகையானது உள்ளூர் செயற்பாடுகள் மீதான பெறுமதிசேர் வரி வருமானத்தினை அதிகரிப்பதற்கும் உதவியது. மோட்டார் வாகன இறக்குமதி தீர்வைக் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றம் (குறிப்பாக வேன் மற்றும் கார்கள்), ஹைபிரிட் மோட்டார் வாகனங்களுக்கான அதிகரித்த கேள்வி, பெறுமதி சேர் வரி வருமானத்திலும் சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியது. இருப்பினும், 2014 ஒக்தோபர் முதல் திரட்டிய வரிக்கட்டமைப்பு நடவடிக்கை என்ற வகையில் மோட்டார் வாகன இறக்குமதி மீதான பெசேவ மற்றும் ஏனைய பல வரிகளை இல்லாதொழிப்பதற்காக எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான முயற்சிகள் கடந்த வருடத்தின் இறுதி மாதத்தில் பெசேவ வருமானத்திலும் வீழ்ச்சியினைப் பிரதிபலித்தது. |
| உற்பத்தி வரி | **250,700** | **252,035** | **256,691** | மதுபானம், புகையிலை உற்பத்திகள் மற்றும் மோட்டார் வானங்கன இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன வருமான அதிகரிப்பிற்கும் வழிகோழியது. |
| இறக்குமதித் தீர்வை | **83,123** | **85,000** | **81,108** | இயந்திரங்கள், உபகரணங்கள், கட்டிடப் பொருட்கள் மற்றும் ஏனைய இடைநிலைப் பொருட்கள் இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி இறக்குமதித் தீர்வை வருமானத்திலும் தாக்கத்தினை ஏற்படுத்தியது இதற்கு மேலதிகமாக, முதலீட்டு உடன்படிக்கைகள் கீழ் இறக்குமதித் தீர்வை விலக்களிப்பு செய்யப்பட்ட பொருட்கள் என்பனவும் வருமான வீழ்ச்சிக்கு காரணமாய் அமைந்தது. மேலும், இந்தியா, பாகிஸ்தான் போன்ற பல்வேறுபட்ட நாடுகளுடன் |


| | | | | |
|---|---|---|---|---|
| | | | | செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை, தென்னாசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை அதேபோன்று , ஆசிய பசிபிக் வர்த்தக உடன்படிக்கை என்பனவற்றின் கீழ் சாதாரண வரிச் சலுகை மற்றும் தீர்வை வரிச் சலுகை வழங்கப்பட்ட பல பொருட்களின் இறக்குமதி மற்றும் முதலீட்டு உடன்படிக்கைகளின் கீழ் இறக்குமதி தீர்வை விலக்களிக்கப்பட்ட பொருட்களின் இறக்குமதி என்பனவும் வருமான வீழ்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன. |
| துறைமுகங்கள், விமான நிலைய அபிவிருத்தி அறவீடு | **61,987** | **80,000** | **68,646** | நுகர்வுப் பொருட்கள், எரிபொருள், பிடவைகள் மற்றும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட பெருட்களின் அதிகரித்த இறக்குமதிகள் வருமான அதிகரிப்பிற்கு பிரதான பங்களிப்புச் செய்தன. |
| தேசக் கட்டுமான வரி | **40,937** | **45,600** | **44,583** | 2014 இல் தே.க.வரியில் நிதிச் சேவைகள் உள்ளடக்கப்பட்டதனால் தே.க.வரி வருமானமும் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. மேலும், தயாரிப்பு உற்பத்திகள், சில்லறை மற்றும் வர்த்தகம், சேவைகள் துறை என்பனவற்றின் செயலாற்றுகைகளும் சாதகமான வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன. |
| ஏனைய வரிகள் | **159,664** | **177,440** | **125,869** | அதிகரித்த தொலைத் தொடர்புகள் சேவைப் பாவனை மற்றும் அவற்றின் விலைத் திருத்தங்கள் காரணமாக தொலைத் தொடர்பு அறவீட்டு வருமானமும் அதிகரித்துள்ளது. புதிய பண்டங்களை விசேட பண்ட அறவீட்டுப் பட்டியலில் உள்ளடக்கியமையினாலும் உள்நாட்டு உற்பத்தியினை அதிகரிக்கும் வகையில் தெரிவு செய்யப்பட்ட பண்டங்களின் விலைகள் திருத்தியமைக்கப்பட்டமை காரணமாகவும் விசேட வியாபாரப் பண்ட அறவீடு மூலமான வருமானம் இத்தகைய அதிகரிப்பிற்குப் பங்களிப்புச் செய்தன. அதிகரித்த நிரமாணப் பணிகளுடன் சீமெந்து, ஓடுகள் என்பனவற்றின் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பினால் செஸ் வருமானமும் விரிவடைந்தது. |
| வரியல்லாத வருமானம் | **131,552** | **152,025** | **144,844** | அரச தொழில் முயற்சிகளின் இலாபங்கள், பங்கிலாபங்கள், வாடகை மற்றும் வட்டி என்பனவற்றில் ஏற்பட்ட வருமான அதிகரிப்பு வரியல்லா வருமானத்திலும் அதிகரிப்பினை ஏற்படுத்தியது. எனினும், மத்திய வங்கி இலாப மாற்றல்கள் மூலமான வரியல்லாத வருமானம் மத்திய வங்கி இலாபத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக வீழ்ச்சியடைந்துள்ளது. |

## 2. செயலாற்றுகை -2014

### 2.1 வருமானம் சேகரிப்பு செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள சகல திணைக்களங்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடல்.

பொருளாதார பகுப்பாய்வுகளின் அடிப்படையில், 2014 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் மொத்த வருமானம் 1,195பில்லியன் ரூபாய்களாகும். இது 2013 ஆம் ஆண்டில் அடையப் பெற்ற ரூபா 1,137 பில்லியனுடன் ஒப்பிடுகையில்5.1 சத வீதத்தினால் அதிகரித்துள்ளது. அரசாங்கத்தின் மொத்த வருமானத்தில் வரிவருமானம் ரூபா 1,050 பில்லியனாக காணப்பட்ட அதேவேளை வரியல்லாத வருமானமானது ரூபா 145 பில்லியனாகக் காணப்பட்டது.

**வரைபு2 >வரி வருமான வகுதி - 2014**



## 2.2. அரசாங்க வருமானப் பொழிப்பு

**அட்டவணை 2 : அரசிறை வருமானம்- 2013 மற்றும் 2014**

*ரூபா. மில்*

| விடயம் | 2013 | 2014 |
|---|---|---|
| **வரி வருமானம்** | **1,005,895** | **1050,362** |
| வருமான வரி | 205,666 | 198,115 |
| பெறுமதி சேர் வரி | 250,523 | 275,350 |
| தேசக் கட்டுமான வரி | 40,937 | 44,583 |
| உற்பத்தி வரி | 250,700 | 256,691 |
| இறக்குமதித் தீர்வைகள் | 83,123 | 81,108 |
| துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு | 61,987 | 68,646 |
| விசேட நுகர்வுப் பண்ட அறவீடு | 46,705 | 47,953 |
| ஏனையவை | 66,255 | 77,916 |
| **வரியல்லா வருமானம்** | **131,552** | **144,844** |
| வட்டி / வாடகை | 11,955 | 13,647 |
| இலாபங்களும் பங்கிலாபங்களும் | 36,169 | 46,814 |
| விற்பனைகளும் கட்டணங்களும் | 40,720 | 35,499 |
| சமூகப் பாதுகாப்பு பங்களிப்புகள் | 15,145 | 14,919 |
| மத்திய வங்கி இலாப மாற்றல்கள் | 26,350 | 11,500 |
| பிற | 2,173 | 33,627 |
| **மொத்த வருமானம்** | **1,137,447** | **1,195,206** |

**2.3 அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் அமுல்படுத்தப்பட்ட கொள்கை மாற்றங்களுக்கேற்ப வரி தொடர்பான சட்ட ஏற்பாடுகளைத் திருத்துதல்.**

**2.3.1. இத்திணைக்களத்தினால் 2014 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட வர்தமானி அறிவித்தல்கள் கீழ் வருமாறு:**

**I. உற்பத்தி வரி(விசேட ஏற்பாடுகள்) சட்டம்:**

- **1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி (விஷேட ஏற்பாடுகள்) சட்டம் (1846/07 ஆம் இலக்க 2014.01.20 ஆந்திகதிய வர்த்தமானி அறிவித்தல்.)** லொறிகள் மற்றும் டிரக் வண்டிகள் என்பனவற்றினை தனித்தனியாக இனங்காண்பதற்கும், புதிய தேசிய உப தலைப்புக்களை அறிமுகப்படுத்துவதற்கும், ஒற்றை வண்டி வாகனங்களுக்கான வரி விகிதத்தில் மாற்றம் செய்யாமல் தொடர்ந்து பேணவும், உள்ளூராட்சி அதிகார சபையினால் அதிகம் பயன்படுத்தப்படும் கலி பவுசர்கள், குப்பை வண்டிகள் என்பனவற்றுக்கான வரி விகதங்களைக் குறைக்கவும், ஆடு தண்டு இயந்திரம், கூடாரங்கள் பொருத்தப்பட்ட வாகனங்களுக்கு புதிய சுங்கக் குறியீடுகளை அறிமுக்படுத்துவதற்கும் உள்நாட்டு பெறுமதி சேர்ப்பினை அதிகரிக்கும்வகையில் மருந்துப் பொருட்கள் பொதியிடற் சுருக்கல், மலசரகூட துவாய்கள் மற்றும் ரெம்பூன்கள் என்பனவற்றின் வரி விகதங்களை திருத்துவதற்காகவும்.
- **1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி (விஷேட ஏற்பாடுகள் சட்டம் (1883/8 ஆம் இலக்க 2014.10.09 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்)**–சிகரெட் மீதான உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) தீர்வையினை அதிகரிப்பதற்காக.
- **1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி (விஷேட ஏற்பாடுகள் சட்டம் (1885/42 ஆம் இலக்க 2014.10.24 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்)** - சுங்க அறவீட்டு வழிகாட்டலின் 87 ஆம் அத்தியாயத்தின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட சில பொருட்கள் மீது துறைமுகம் மற்றும் விமான நிலைய அறவீடு, சுங்கத் தீர்வை, செஸ், தேச கட்டுமாண வரி, பெறுமதி சேர் வரி என்பனவற்றுக்குப் பகரமாக உற்பத்தி (விஷேட ஏற்பாடுகள் தீர்வையினை அறிமுகம் செய்வதற்காக.
- **1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி (1885/43 ஆம் இலக்க 2014.10.24 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்)** - அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வரி அறவிட முடியுமான பொருட்களை உற்பத்தி (விஷேட ஏற்பாடுகள) தீர்வை செலுத்துவதிலிருந்து விலக்களிப்புச் செய்வதற்காக

**II. செஸ் வரி**

- **1979 இன் 40 ஆம் ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் (1846/6 ஆம் இலக்க 20.01.2014 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல்)** - உள்நாட்டு உற்பத்தி கைத்தொழிலை ஊக்குவிக்கும் வகையிலும், உள்நாட்டு மருந்து உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையிலும் மருந்துப் பொருட்களை பொதியிட பயன்படும் லெமினேற்றின் பொதியிடல் சுருள்கள் மீதான இறக்குமதி செஸ் வரிகளை நீக்குவதற்கும், மலசலகூட துவாய்கள் மற்றும் ரெம்பூன்கள் மீது வரி விதிக்க அல்லது வரியினை அதிகரிப்பதற்காக

- **1979 இன் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் (1885/46 ஆம் இலக்க 2014.10.24 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்)** - இறக்குமதி செய்யப்பட்ட பாற்கட்டி துகளைப் பயன்படுத்தி உள்நாட்டில் இனிப்பு பண்ட தயாரிப்பு கைத்தொழிலினை ஊக்குவிப்பதற்காக பாற்கட்டி துகளின் மீதான இறக்குமதி செஸ் விகிதத்தினை நீக்குவதற்கும் மதுபானம் மற்றும் இறப்பர் இறக்குமதி செஸ் வரியினை அதிகரிப்பதற்காகவும்

**III. மதுவரி கட்டளைச் சட்டம்**

- **மதுவரி அறிவித்தல் இலக்கம் 962( 2014.01.20 ஆம் திகதிய 1846/8 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் )** மதுவரி தீர்வைக் கட்டணத்தினை திருத்தியமைப்பதற்காக - மாதமொன்றின் முதல் 15 நாள் உற்பத்தி தொடர்பில் குறித்த மாதத்தில் இறுதி நாளன்று அல்லது அதற்கு முன்னரும், மாதமொன்றின் 15 ஆம் நாளுக்கு பிந்திய உற்பத்தி தொடர்பில் அடுத்துவரும் மாத்தின் 15 ஆவது நாளன்று அல்லது அதற்கு முன்னரும் செலுத்தப்பட வேண்டிய தீர்வையினை திரட்டும் வகையில் மதுவரிக் கட்டளைச் சட்டத்தினை திருத்துவதற்காக.
- **மதுவரி அறிவித்தல் இலக்கம் 963 - 2014.01.20 ஆம் திகதிய 1846/9 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் )** அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வு மற்றும் கல்வி நிறுவனங்கள், மருந்துப் பொருட்கள் உற்பத்தி நிறுவனங்கள், வைத்திய சாலைக்ள மற்றும் அரச திணைக்களங்கள் என்பனவற்றின் பயன்பாட்டிற்காக 10,000 லீற்றர் மதுசாரத்தினை (எதனைல் ஸ்பிரத்து) வரித் தீர்வையற்ற எல்லையினை வழங்குவதற்கும், மதுபான உற்பத்திக்காக பயன்படும் எதனைல் மதுசாரம்) இறக்குமதி செய்யப்பட்ட மதுசாரத்திற்காக உற்பத்தி தீர்வை விகிதங்களுக்கிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதற்காகவும்
- **மதுவரி அறிவித்தல் 965 (1883/7 ஆம் இலக்க, 2014.10.09 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்)** - இலங்கையில் தயரிக்கப்பட்ட வெளிநாட்டு ஸ்பிரித்துக்கள் மீதான மதுவரி விகிதத்தினை திருத்தியமைப்பதற்காக
- **மதுவரி அறிவித்தல் 966 (1883/7 ஆம் இலக்க, 2014.10.09 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்)** - சுட்டியில் சுட்டிக்காட்டப்பட்டவாறு 5% இற்கு குறைவான மற்றும் 5% இற்கு மேற்பட்ட பலத்தினைக் கொண்ட மாவூறல் மதுபானத்தின் மீதான தீர்வை விகிதத்தினை திருத்தியமைப்பதற்காக
- **மதுவரி அறிவித்தல் 967 (1883/7 ஆம் இலக்க, 2014.10.09 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்)** - சுகாதார அமைச்சின் மருந்து வழங்கல் பிரிவின் பாவனைக்காக 20,000 லீற்றர் எல்லை வரை தீர்வையினை விட்டும் விலக்களிப்புச் செய்வதற்காகவும் மதுபான உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட ஸ்பிரித்துக்கள் (எதனோல் அல்கஹோல் என்பனவற்றிற்கான மதுவரி தீர்வை விகிதங்களைத் திருத்தியமைப்பதற்காகவும்
- **மதுவரி அறிவித்தல் 968 (1885/44 ஆம் இலக்க, 2014.10.24 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்)** - இலங்கையில் தயரிக்கப்பட்ட (கள்ளு அல்லது தாவரத்திலிருந்து தயாரிக்கப்பட்ட ஏதேனும் மதுபானம் நீங்கலாக) மதுபானங்கள் மீதான தீர்வை விகிதத்தினை திருத்தியமைப்பதற்காக

- **மதுவரி அறிவித்தல் 969 (1885/44 ஆம் இலக்க, 2014.10.24 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்** - இலங்கையில் தயாரிக்கப்பட்ட மலாசியஸ், பனை, தெங்கு மற்றும் பதனிடப்பட்ட சாராயம் என்பனவற்றுக்கான தீர்வை விகிதத்தினை திருத்தியமைப்பதற்காக
- **மதுவரி அறிவித்தல் 970 (1885/44 ஆம் இலக்க, 2014.10.24 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்)** - இலங்கையில் தயரிக்கப்பட்ட "வெளிநாட்டு" ஸ்பிரித்துக்கள் மீதான மதுவரி விகிதத்தினை திருத்தியமைப்பதற்காக
- **மதுவரி அறிவித்தல் 971 (1885/44 ஆம் இலக்க, 2014.10.24ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்)** - மாவூறல் மதுபானத்தின் மீதான தீர்வை விகிதத்தினை திருத்தியமைப்பதற்காக
- **மதுவரி அறிவித்தல் 972 (1885/44 ஆம் இலக்க, 2014.10.24 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்)** - ஸ்பிரித்து (எதனோல் அல்கஹோல்) உள்ளுர் வழங்கல் அல்லது இறக்குமதி மீதான தீர்வையினை திருத்தியமைப்பதற்காக

## IV. உள்நாட்டு இறைவரிச் சட்டம்

- **2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் (1857/ 8 ஆம் இலக்க 09.04.2014 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்.)** 2012 ஏப்ரல் 1ஆந்திகதியன்றோ அல்லது அதற்கு பின்னரோ தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பில், நிதிக்கூற்றுக்களை தயாரிக்குகையில் இலங்கை நிதியறிக்கையிடல் நியமங்கள் அல்லது இலங்கை கணக்கீட்டு நியமங்களை முதன்மை கூறுகளாகக் கொண்டிருக்கினற் இலங்கை கணக்கு நியமங்களைப் பின்பற்றி இலாபங்கள் அல்லது வருமானத்தினை கணிப்பீடு செயவதில் சீராக்கல்களை வரி நோக்கங்களுக்காக

## V. பெறுமதிசேர் வரி

- **2014 இன் 7 ஆம் இலக்க பெறுமதிசேர் சட்டம்** - மொத்த அல்லது சில்லறை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள எவரேனும் நபர் ஒருவர் அல்லது பங்குடமைக்கு காலாண்டிற்கான புரள்வு ரூபா 250 மில்லியனை விட விஞ்சாத போது பெசேவ பொறுப்பின் முதனிலையினை அதிகரிப்பதற்காக.
- **2014 இன் 7 ஆம் இலக்க பெறுமதிசேர் சட்டம் -( 1868/10 ஆம் இலக்க, 23.06.2014 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல்)–** 2014.01.01 முதல் பயன்வலுப் பெறும் வகையில் நிதிச் சேவைகள் மீது பெசேவ கணிப்பீடு செய்யப்படுகின்ற முறைமை மற்றும் முறைமையுடன் தொடர்புபற்ற குறித்துரைக்கப்பட்ட விடயங்களை கட்டளையிடுவதற்காக

## VI பொருளாதார சேவை அறவீட்டுச் சட்டம்

- **2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணச் சட்டம் (1857 9 ஆம் இலக்க 2014.04.09 ஆந்திகதிகய வர்த்தமானி அறிவித்தல்)**- சட்டத்தின் 2 ஆம் பிரிவிற்கமைய ஏதேனும் வியாபாரம் அல்லது வர்த்தகம் ஒன்றில் ஈடுபட்டுள்ள பங்குடமை அல்லது தனியாள் ஒருவரின் புரள்வினை கணிப்பீடு செய்வதற்கான முறைமை, அதற்காக 0.25 சதவீதம் என்ற புதிய பொருளாதார சேவை கட்டணத்துடன் தொடர்புற்ற அட்டவணையினை பயன்படுத்துதல்.

**VII** அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டம்

- **2003 ஆம் ஆண்டின் 03ம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டம் ( 2014.05.29 ஆந் திகதிய 1864/45 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)–** ஆண்டறிக்கை - 2013 இனை வெளியிடுவதற்காக.
- **2003 ஆம் ஆண்டின் 03ம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டம் (2014.06.30 ஆந் திகதிய 1869/5 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**- 2014 ஆம் ஆண்டிற்கான அரையாண்டு அரசிறை முகாமைத்துவ பொறுப்பு அறிக்கையினை வெளியிடுவதற்காக
- **2003ன் 03ம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டம் (2014.10.24 ஆந் திகதிய 1885/41 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)** 2015 ஆம் ஆண்டிற்கான அரசிறை முகாமைத்துவ அறிக்கையினை வெளியிடுவதற்காக.

**VIII** முத்திரை வரி (விசேட ஏற்பாடுகள் ) சட்டம்

- **2006 இல் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (1864.∴2 ஆம் இலக்க, 2014.05.26 ஆந்திகதிய வர்த்தமான அறிவித்தல்.** 2006.05.10 ஆம் திகதிய 1809 19 ஆம் இலக்க விசேட வர்த்தமானியினால் இறுதியாக திருத்தியமைக்கப்பட்டவாறான 2006.10.05 ஆந்திகதிய 1465.∴19 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் அட்டவணையை திருத்தியமைத்து எந்தவொரு கம்பனியினதும் ஏதேனும் ஒரு தொகை பங்கு வழங்கலை, மாற்றலை, தொடர்ந்து வழங்கப்படும் ஏதேனும் பங்குச் சான்றுதழ் என்பனவற்றின் பேரில் சந்தைப் பெறுமதியில் முத்திரை வரியினை அறவிடுவதற்காக
- **2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை வரி (விே'ட ஏற்பாடுகள் சட்டம்) (1878.∴3 ஆம் இலக்க, 2014.01.09ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்)** - முன்னைய வர்த்தமானி அறிவித்தல்களில் உள்ள விடயங்கள் மற்றும் புதிய விடயங்களை மீள இலக்கமிடுவதற்காக
- **20006 இன் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை விசேட ஏற்பாடுகள் சட்டம் (1882/17 ஆம் இலக்க, 2014.09.30ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்)** - ஏதேனும் கம்பனி ஒன்றின் ஏதேனும் இல்க்க பங்குகளை பெற்றுக் கொள்ளல் மாற்றல், பங்கு விநியோகித்தனைத் தொடர்ந்து விநியோகிக்கப்பட்ட ஏதேனும் பங்குச் சான்றுதழ் மீதான கட்டணத்தினை திருத்தியமைப்பதற்காக

**IX** தொலைத் தொடர்புகள் அறவீட்டுச் சட்டம்

- **2011 இன் 21 ஆம் இலக்க தொலைத் தொடர்புகள் அறவீட்டுச் சட்டம் மீதான திருத்தங்கள்** - 2014.01.01 முதல் பயன்பாட்டிலுள்ள 20% தொலைத் தொடர்பு அறவீட்டினை 25% அதிகரிப்பதற்காக.

**X** அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்.

- 1972 இன் 19 ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புச் சட்டம் (1846/10 ஆம் இலக்க 2014.01.20 **ஆந்திகதிய வர்த்தமானி அறிவித்தல்.**)லொறிகள் மற்றும் டிரக் வண்டிகள் என்பனவற்றினை தனித்தனியாக இனங்காண்பதற்கும், புதிய தேசிய உப தலைப்புக்களை அறிமுகப்படுத்துவதற்கும் அத்தகைய தேசிய உப தலைப்புகள் மீது குறைக்கப்பட்ட வரி வீதங்களைப் பேணவும், ஒற்றை வண்டி வாகனங்களுக்கான வரி

விகிதத்தில் மாற்றம் செய்யாமல் தொடர்ந்து பேணவும், உள்ளூராட்சி அதிகார சபையினால் அதிகம் பயன்படுத்தப்படும் கலி பவுசர்கள், குப்பை வண்டிகள் என்பனவற்றுக்கான வரி விகதங்களைக் குறைக்கவும், ஆடு தண்டு இயந்திரம், கூடாரங்கள் பொருத்தப்பட்ட வாகனங்களுக்கு புதிய சுங்கக் குறியீடுகளை அறிமுக்ப்படுத்துவதற்கும் உள்நாட்டு பெறுமதி சேர்ப்பினை அதிகரிக்கும் வகையில் மருந்துப் பொருட்கள் பொதியிடற் சுருக்கல், மலசரகூட துவாய்கள் மற்றும் ரெம்பூன்கள் என்பனவற்றின் மீதான வரி விகிதங்களை திருத்துவதற்காகவும்.

2.4 அரசிறைக் கொள்கை தொடர்பாக கௌரவ நிதி, திட்டமிடல் அமைச்சரினால் 2014 ஆம் ஆண்டு அமைச்சரவைக்கு பல அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.அவ்வாறே,அரசிறைக் கொள்கை தொடர்பில் கௌரவ நிதி, திட்டமிடல் அமைச்சர் அவர்களின் அவதானிப்புக்கள் வழங்கப்பட வேண்டியுள்ள அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கான அவதானிப்புக்களும் , இத் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**2.5 பல்வேறு வரிகள் தொடர்பான சட்டமூலங்கள் மற்றும் வர்த்தமானி அறிவித்தல்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தலும் அதனைப் பின்தொடர்ந்த பணிகளையும் மேற்கொள்ளல்.**

- வரி சட்ட யாப்பினைத் திருத்துதல் தொடர்பில், நிதி திட்டமிடல் அமைச்சின் சட்ட விவகாரத் திணைக்களம் , சட்ட வரைஞர் திணைக்களம்,கௌரவ சட்டமா அதிபர், உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் ,அரசாங்க அச்சகம் மற்றும் பாராளுமன்றம் என்பனவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்தி, குறித்த பணிகளை நிறைவேற்றப்படுகின்றன.

- வரி அல்லது கட்டண மீளமைப்பு தொடர்பிலான வர்தமானி அறிவித்தல்கள் 2014 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டன.

**2.6. சகல வருமான மூலங்களையும் மீளாய்வுக்குட்படுத்தல், வருமானங்கள் பற்றிய குறித்த தகவல்களைத் திரட்டுதல், வருமான மதிப்பீடு மற்றும் காசுப்பாய்ச்சல் நிலைமைகளை கண்காணித்தல்.**

- 2015 ஆம் ஆண்டிற்கான உத்தேச வருமான மதிப்பீடு, வருமானத் திரட்டல் திணைக்களத்துடன் இணைந்து தயாரிக்கப்படுகின்றது.
- திறைசேரி செயலாளர், திறைசேரி பிரதிச் செயலாளர், திறைசேரித் திணைக்களப் பிரதி நிதிகள் , வருமானம் திரட்டும் உத்தியோகத்தர்கள், மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பங்களிப்புடன் அரசிறைக் கொள்கைக் குழுவினால் நான்கு கூட்டங்கள் (காலாண்டு அடிப்படையில்) நடாத்தப்பட்டுள்ளன.
- வருமானத் திரட்டு அறிக்கை மாதாந்த வருமான அறிக்கை மூலமும் விசேட தகவல்களைப் பெற்றுக் கொள்வதன் மூலமும் மேற்பார்வை செய்யப்பட்டதுடன், கொள்கை ரீதியான தீர்மானங்கள் எடுக்கப்படுவதற்காக செயலாற்றுகை பகுப்பாய்வு செய்யப்படுகின்றது.

**2.7 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் அறிக்கைகளை வெளியிடுதல்**

- **வருடாந்த அறிக்கை – 2013**

  குறித்த நிதியாண்டு முடிவடைந்து 5 மாத காலம் கழிவதற்கு முன்பு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து பொதுமக்களுக்கு வெளியிடப்பட வேண்டிய இறுதி வரவு செலவுத் திட்ட நிலைமை அறிக்கை, அதாவது 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை 2014 மே மாதத்தில் வெளியிடப்பட்டது.

- **அரையாண்டு அரசிறை நிலைமை குறித்த அறிக்கை – 2014**

  குறித்த ஆண்டின் யூன் மாதத்தின் இறுதித் தினத்தன்று அல்லது ஒதுக்கீட்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டு 6 மாதம் கழிவதற்கு முன்பு ஆகிய இரு காலப் பிரிவுகளின் பின்னர் வரும் நாளுக்கு முன்பதாக ஆண்டு தோறும் வெளியிடப்பட வேண்டும் என்பதுடன், 2014 ஆம் ஆண்டின் அரையாண்டு அரசிறை நிலைமை குறித்த அறிக்கை 2014யூன் மாதத்தில் வெளியிடப்பட்டது.

- **அரசிறை முகாமைத்துவ அறிக்கை - 2015**

  2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 4, 5 மற்றும் 6 ஆவது பிரிவுகளின் கீழ் சமர்ப்பிக்கப்படுகின்ற அரசிறை முலோபாய அறிக்கை 2015 உம், 7, 8 மற்றும் 9 ஆம் பிரிவுகளின் கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வரவு செலவுத் திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை தொடர்பிலான அறிக்கைகள் 2015 இரண்டையும் உள்ளடக்கிய அரசிறை முகாமைத்துவ அறிக்கையானது 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதத்தில் வெளியிடப்பட்டது.

## 3. நிர்வாகமும் கணக்குகளும்

### 3.1 நிறுவனக் கட்டமைப்பு

அரசிறைக் கொள்கைத் திணைக்களம் 65 அனுமதிக்கப்பட்ட பதவியணியினரைக் கொண்டுள்ளது. அதற்கமைய, பின்வரும் அலுவலர்கள் இத்திணைக்களத்தில் பணியாற்றுகின்றனர்.

**அட்டவணை 3: பதவியணி விபரம் -2014 (2014.12.31அன்றுள்ளவாறு)**

| புதவி | அனுமதிக்கப்பட்ட பதவியணி | தற்போதைய பதவியணி | பதவி வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் - இ.நி.சே | 01 | 01* | - |
| மேலதிகப் பணிப்பாளர் நாயகம் -இ.நி.சே. | 01 | 01 | - |
| பணிப்பாளர் இ.நி.சே. | 02 | - | 02 |
| இ.தி.சே | 01 | 01 [அ] | - |
| சிரேஷ்ட பொருளியலாளர் | 01 | - | 01 |
| பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர்-இ.நி.சே. | 09 | 04+ 02[ஆ]+ 01[இ] | 02 |
| பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர்-இ.தி.சே | 04 | 04 | - |
| பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர்-இ.க.சே. | 01 | - | 01 |
| பொருளியலாளர் | 01 | - | 01 |
| புள்ளிவிபரவியலாளர் | 01 | - | 01 |
| நிர்வாக உத்தியோகத்தர் | 01 | 01 | - |
| மொழி பெயர்ப்பாளர் | 02 | 01 | 01 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 06 | 03 | 03 |
| அபிவிருத்தி உதவியாளர் | 06 | 03 | 03 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 13 | 12 | 01 |
| சாரதிகள் | 06 | 04 | 02 |
| அலுவலக உதவியாளர் | 09 | 07 | 02 |
| **மொத்தம்** | **65** | **45** | **20** |

[அ]அனுமதிக்கப்பட்ட பதவியணியில் இலங்கை மத்திய வங்கியின் பதவி நிலை அலுவலர் ஒருவர் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றுகிறார்.

[ஆ]இதற்கு மேலதிகமாக, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து இணைத்துக் கொள்ளப்பட்டசிரேஷ்ட வரி மதிப்பீட்டு அலுவலர் ஒருவர் பிரதிப் பணிப்பாளராக பணியாற்றுகின்றனர்.

[இ]தற்போது கற்கைக்காக சம்பளத்துடன்வெளிநாட்டு விடுமுறை பெற்றுச் சென்றுள்ளார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து இணைத்துக் கொள்ளப்பட்ட .வரி ஆலோசகர் ஒருவரினது சேவையும் இத் திணைக்களத்திற்குக் கிடைக்கப் பெறுகின்றது.

### 3.2.மனிதவள அபிவிருத்தி

திணைக்களத்தின் பதவியிணருக்கு அவர்களின் தொழில்சார் திறமைகளை விருத்திசெய்து கொள்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் வெளிநாட்டுப் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் உள்நாட்டுப் பயிற்சிக் கற்கை நெறிகளிலும் பங்கேற்கச் செய்யப்பட்டனர். அதனூடாக அவர்களின் வினைத்திறன் அதிகரித்துதிணக்களத்தின் பணிகளை

செயற்றிறன்மிக்க வகையில்மேற்கொள்வதற்கும்எதிர்பார்க்கப்படுகிறது. பதவியிணருக்காக 2014 இல் வழங்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகள் குறித்த விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**3.2.1உள்நாட்டுப் பயிற்சிகள்/பற்றரைகள்**

**அட்டவணை 4 : அ**

| பெயர் | பதவி | பயிற்சி பெற்ற நிறுவகம் &நிகழ்ச்சித் திட்டம் | பயிற்சிக் காலம் |
|---|---|---|---|
| திருமதி. டப்.எம்.ஏ.விமலஜீவ | உதவிப் பணிப்பாளா | Institute of chartered Accountants of Sri Lanka–IFRS Application Level Program | 6, 7,16, 17 ஜனவரி 2014 |
| செல்வி. ஜே.ஏ.டி.ஆர்.ஜயசூரிய | உதவிப் பணிப்பாளர் | Skills Development Fund – Employment Income & Operation of PAYE Scheme & S Vat | 31ஒற்றோபர் 2014 |
| திரு. டி.எம்.எஸ்.ஏ. நிரோஷண | உதவிப் பணிப்பாளர் | Centre for Banking Studies – Applied Econometrics Practical Approach using e-views software | 16 ஜனவரி – 05 யூன் 2014 |
| திருமதி. ஸீ.கே.விதாண | அபிவிருத்தி உதவியாளர் | SLIDA - Certificate Course in English for Employment Purposes (CEEP) –Intermediate Level | 12 ஜனவரி 2014 முதல்பத்து வாரங்கள் |
| திருமதி. டப்.எம்.எம்.பீ பெரேரா | அரச முகாமைத்துவ உதவியாளர் | SLIDA - Certificate Course in English for Employment Purposes (CEEP) –Intermediate Level | 12 ஜனவரி 2014 முதல் பத்து வாரங்கள் |
| திருமதி. டி.பீ. ஆரியதிலக | அரச முகாமைத்துவ உதவியாளர் | SLIDA - Certificate Course in English for Employment Purposes (CEEP) –Intermediate Level | 12 ஜனவரி 2014 முதல் பத்து வாரங்கள் |
| திருமதி. எஸ்.டப்.எஸ்.என். திலன்திகா | அரச முகாமைத்துவ உதவியாளர் | SLIDA - Certificate Course in English for Employment Purposes (CEEP) –Intermediate Level | 12 ஜனவரி 2014 முதல் பத்து வாரங்கள் |
| செல்வி. டப்.ஆர் மதுவந்தி | அரச முகாமைத்துவ உதவியாளர் | District Secretariat, Colombo.- Introduction Training Program for Newly Recruted Public Managemrnt Assistant 2014 | 25 ஓகத்து - 05 செத்தெம்பர் 2014 |
| திருமதி. ஜே.எஸ். தில்மிணி | அரச முகாமைத்துவ உதவியாளர் | District Secretariat, Colombo.- Introduction Training Program for Newly Recruted Public Managemrnt Assistant 2014 | 25 ஓகத்து - 05 செத்தெம்பர் 2014 |
| செல்வி. எம்.ஜீ.ஆர்.எஸ். தனபால | அரச முகாமைத்துவ உதவியாளர் | District Secretariat, Colombo.- Introduction Training Program for Newly Recruted Public Managemrnt Assistant 2014 | 25 ஓகத்து - 05 செத்தெம்பர் 2014 |

**3.2.2வெளிநாட்டுப் பயிற்சிகள்/ பற்றரைகள்**

**அட்டவணை 4 : ஆ**

| பெயர் | பதவி | நிகழ்ச்சித் திட்டம்&நாடு | பயிற்சிக் காலம் |
|---|---|---|---|
| திரு. கே.எம்.மஹிந்த சிறிவர்தன | பணிப்பாளர் நாயகம் | IMF - IMF/WB Spring Meetings in Washington DC, USA | 06 - 14 ஏப்ரல் 2014 |
| | | 5th Annual dbAcess Asia Conference 2014 - Singapore | 20 - 22 மே 2014 |
| | | Investor Meeting 2014 – USA | 01 -11 செத்தெம்பர் 2014 |
| | | Investor Meeting 2014 – UK | 26 – 31 ஒற்றோபர் 2014 |
| | | Public Finance Management (PFM) - Pakistan | 24 – 31 நவம்பர் 2014 |
| திரு ஏம்.கே.சீ. சேனாநாயக | உதவிப் பணிப்பாள | Ph.D. Programme in Economics at the University of New South Wales -Australia | 2011 - 2014 திசெம்பர் 31 |
| திரு. எஸ்.பீ. கிரிவத்துடுவகே | உதவிப் பணிப்பாளா | Ministry of Finance of Japan – Economic Policies | 10 மே – யூன் 07 2014 |
| திருமதி எம்.ஏ.என்.ஸீ செனவிரத்ன | உதவிப் பணிப்பாளர் | JDS, Japan – Macro Economics and Development Economics | 22 ஓகத்து 2013 – ஒற்றோபர் 2015 |
| செல்வி. எச்.டீ.ஏ. றுக்ஷிணி | உதவிப் பணிப்பாளர் | IMF Singapore Regional Training Institure – Macroeconomic Diagnostic | 24 பெப்ருவரி – 07 மார்ச் 2014 |
| செல்வி ஆர்.எம்.கே.எம். லக்மிணி | உதவிப் பணிப்பாளா | IMF Singapore Regional Training Institure – Macroeconomic Management and Fiscal Policy | 05 – 18 ஒற்றோபர் 2014 |

## 3.3.நிதி நிருவாகம்

2014 ஆம் ஆண்டில் தலைப்பு இல. 238, நிகழ்ச்சித் திட்டம் 1, கருத்திட்டம் 1 இன் கீழ் இத்திணைக்களத்திற்கு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டினால் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருந்ததுடன், அவ் ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்ட விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 5 :**

**(i) 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளை பயன்படுத்திய விதம்**

| செலவு விபரம் | 2014 மதிப்பீடு ரூபா | 2014 தேறிய ஒதுக்கீடுகள் ரூபா | 2014மெய்ச் செலவு ரூபா |
|---|---|---|---|
| **மீண்டெழும் செலவு** | **74,680,000** | **74,770,000** | **74,731,475.18** |
| ஆள்சார் படிகள் | 24,000,000 | 22,817,000 | 22,811,513.37 |
| பிரயாணச் செலவுகள் | 3,900,000 | 2,246,000 | 2,232,318.80 |
| வழுங்கல்கள் | 2,480,000 | 2,340,000 | 2,334,912.55 |
| பராமரிப்புச் செலவுகள் | 2,300,000 | 2,431,000 | 2,427,889.83 |
| ஒப்பந்த சேவைகள் | 41,500,000 | 44,351,000 | 44,340,136.61 |
| மாற்றல்கள் | 500,000 | 585,000 | 584,704.02 |
| **மூலதனச் செலவு** | **1,120,000** | **1,120,000** | **1,003,839.19** |
| புனரமைப்பும் மேம்படுத்தலும் | - | - | - |
| பற்றுக்கள் | 720,000 | 720,000 | 711,809.19 |
| மூலதன மாற்றல்கள் | - | - | - |
| ஆற்றல் விருத்தி | 400,000 | 400,000 | 292,030.00 |
| **முழு மொத்தம்** | **75,800,000** | **75,890,000** | **75,735,314.37** |

### (ii)அரசாங்க ஊழியர்களின் முற்பணக் கணக்கு

2014ஆம் ஆண்டுக்காக இத்திணைக்களத்தின் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் விபரங்கள் கீழ் வருமாறு அமையும்:

**அட்டவணை 6 : முற்பணக் கணக்கு**

| விபரம் | அனுமதித்த எல்லை ரூபா | உள்ளபடியான எல்லை ரூபா |
|---|---|---|
| 1. ஆகக் கூடுதலான செலவின எல்லை | 2,500,000 | 2,498,354.00 |
| 2. ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை | 1,000,000 | 1,568,963.13 |
| 3. ஆகக் கூடுதலான வரவு மீதி எல்லை | 10,000,000 | 7,678,795.36 |

### (iii) கணக்காய்வு ஐய வினா

நிதிஅமைச்சின் முகாமைத்துவக் கணக்காய்வுப் பிரிவினால் 05 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும், கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்தினால் 05 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் 2014 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்றதுடன், அவற்றுக்கான பதில்களும் உரிய காலத்தில் அளிக்கப்பட்டுள்ளன.